# பெருநகர சென்னை மாநகராட்சி

## செய்தி வெளியீடு

**செ.வெ. எண். 09** **நாள். 04.12.2017.**

**எண்.11. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல்–2017 முன்னிட்டு பொதுப்பார்வையாளர்களை அரசியல் கட்சியினர், பொதுமக்கள் நேரடியாக சந்தித்து தேர்தல் குறித்த புகார்களை தெரிவிக்கலாம் என மாவட்ட தேர்தல் அலுவலர்/ பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

------

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி நடைபெறவுள்ள எண்.11. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல்–2017 முன்னிட்டு பொதுப்பார்வையாளர்களை வரும் 06.12.2017 முதல் அரசியல் கட்சியினர், பொதுமக்கள் நேரடியாக சந்தித்து தேர்தல் குறித்த புகார்களை தெரிவிக்கலாம் என மாவட்ட தேர்தல் அலுவலர்/ பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

சென்னை மாவட்டத்தில் உள்ளடங்கிய எண்.11. டாக்டர்.இராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் வருகின்ற 21.12.2017 அன்று நடைபெறவுள்ளது. எனவே மேற்கண்ட தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் தேர்தல் நன்னடத்தை விதிகள் முழுமையாக அமலில் உள்ளது.

இந்திய தேர்தல் ஆணையம் இந்த இடைத்தேர்தலை கண்காணித்திட பொதுபார்வையாளர்களாக திரு.கம்லேஷ்குமார் பந்த், இ.ஆ.ப., அவர்கள் (கைபேசி எண் 9445071063) மற்றும் திருமதி.அல்கா ஸ்ரீவஸ்தவா, இ.ஆ.ப., (கைபேசி எண் 9445036541) அவர்களையும் நியமித்துள்ளது.

மேற்படி தேர்தல் பார்வையாளர்களிடம் பொதுமக்கள் தேர்தல் தொடர்பான புகார்களை நேரில் தெரிவிக்கவேண்டுமானால் ''சேப்பாக்கம் அரசு விருந்தினர் மாளிகை'' அறை எண்.14–ல் 06.12.2017–ம் தேதியிலிருந்து காலை 9.30 மணி முதல் 10.30 வரை நேரில் தெரிவிக்கலாம்.

தேர்தல் தொடர்பான புகார்களை சேப்பாக்கம் அரசு விருந்தினர் மாளிகையில் உள்ள கட்டுப்பாட்டு அறையின் தொலைபேசி எண் 044–25333021, 25333022 வாயிலாக தெரிவிக்கலாம்.

மேலும், தேர்தல் தொடர்பான புகார்கள் / ஆலோசனைகளை தெரிவிக்க 1800–4257012 மற்றும் 1913 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண் கொண்ட கட்டுப்பாட்டு அறையும் இயங்கி வருகிறது. இத்தகவலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை–3.**